Eelakesari Educational Supplement

விலை சதம் 3

ஓம்

# ஈழகேசரி

## (கல்வி அனுபந்தம்)

"கற்பவை கற்றுக் கற்றாங் கொழுக"

சன்மார்க்க சபை 1934 குரும்பசிட்டி

புத்தகம் 2 } சுன்னாகம்: வெகுதானிய ஹூ புரட்டாதிமீ ௨௰௨ (9-10-38) { 1

## சுபசோபனம்

இன்று எமது கல்வி அனுபந்தத்தின் இரண்டாவது வருட ஆரம்பதினம். சென்ற ஒருவருட காலத்துக்குள்ளேயே கல்வி அனுபந்தம் அடைந்த செல்வாக்கு அதன் பிற்கால வளர்ச்சியைத் தெற்றெனக் காட்டுகின்றது. இலங்கையின் பல பாகங்களிலுமுள்ள பாடசாலைகளிலிருக்கும் சின்னஞ் சிறு குழந்தை முதற்கொண்டு ஆசிரியகலாசாலை மாணவர் வரையும் கல்வி அனுபந்தத்தில் விஷயதானஞ் செய்திருக்கின்றனர். அவரவர்கள் தம் மனத்தெழும் அபிப்பிராயங்களையும் முறையீடுகளையும் கல்வி சம்பந்தமாக மற்றையோர்க்கு வெளிப்படுத்துவதற்கு எமது கல்வி அனுபந்தம் ஏற்றவோர் சாதனமாயிருக்கிறது. பால்ய எழுத்தாளர்களில் எத்தனையோ இரத்தினங்களும் நட்சத்திரங்களும் ஆங்காங்கு பரவிக் கிடந்தனர். அவர்களைப் பிரகாசிக்கச் செய்வதற்குக் கல்வி அனுபந்தம் ஓர் சாதனமாயிருந்ததென்பது வெளிப்படையான விஷயம். இன்னும் எத்தனையோ இளமையான எழுத்தாளர்கள் எமது நாட்டிலிருக்கின்றனர். அவர்களெல்லோரும் முன் வந்து தங்கள் தங்கள் திறமையைக் காண்பிப்பர் என்று நம்புகின்றோம்.

இன்று இலங்கையில் நிலைபெறும் கல்விப் பிரச்சினை பற்பலரின் விவாதத்துக்கிடமாகியிருக்கின்றது. கல்விச் சட்டமென்ற ஒரு கட்டளைச் சட்டத்தின் நகல் பிரதி வெளிவந்த நாள் தொடக்கம் இலங்கையின் பலபாகங்களிலுமுள்ள உபாத்தியாயர்களும் மற்றும் கல்வி நிபுணர்களும் அச்சட்டத்தின் பிரிவுகளைப்பற்றித் தத்தமக்குத் தோன்றியவாறு அபிப்பிராயங்கள் கூறத் தொடங்கியிருக்கின்றனர். இதுகாறும் தங்கள் மதக் கொள்கைகளைப் பரப்ப எண்ணமுடைய சில சமூகத்தாரால் பாடசாலைகள் எண்ணிக்கையில்லாமல் கட்டப்பெற்று வந்தன. கிறிஸ்தவமார்க்கத்தினரின் பாடசாலைகளே இலங்கையில் பெரும்பான்மையானவைகள். இப்போதும் குறித்த கல்விச் சட்டத்தை எதிர்த்து நிற்பவர்கள் அவர்கள்தான். மேற்படி சட்டம் அவர்கள் கொள்கைகளை நிறைவேற்ற விடாது தடைப்படுத்துமென்பது அவர்கள் அபிப்பிராயம்.

எங்ஙனமிருப்பினும் நமது நாட்டில் கல்வி முறை இப்போது அனுட்டானத்திலிருப்பதை விட மாற்றமடையவேண்டுமென்பது மிக அவசியமே. தாய்மொழிக் கல்விக்கு முதன்மை ஸ்தானம் அளிக்கப்படவேண்டியது ஒருதலை. தொழிற்கல்வி இன்றியமையாத ஒரு அஸ்திபாரமாகவேண்டும். கணக்கு வழக்கில்லாமல் மாணவர்கள் வெறும் ஏட்டுக் கல்வியைக் கற்றுவிட்டு உத்தியோகமில்லாது அலைந்து திரிவது நாளுக்குநாள் வளர்ந்து வருவது கண்கூடு. இவற்றை உத்தேசித்தே 'இந்தியாவிலே மகாத்மாகாந்தி 'வார்தா திட்டம்' என்ற முறையை வகுத்துதவினர். இப்பொழுது பல இடங்களில் இம்முறை அனுட்டானத்துக்குக் கொண்டுவரப்படுகிறதென்று தெரியவருகிறது. தொழிற் கல்வி யவசியமென்பதை இப்போது பலர் ஆதரிக்கின்றனர்.

அடுத்தபடியாக தமிழ் சிங்களமாகிய இரு பாஷைகளும் இலங்கைமக்கள் யாவர்க்கும் தெரியவேண்டியதவசியம். அங்ஙனமிருந்தால் தான் தேசத்தில் ஒற்றுமையும் சகோதரத்துவமும் நிலவும். வியாபாரம் முதலிய தொழில் துறைகளுக்கு வசதிகள் பல ஏற்படும். இந்தியா சுதந்தரமடைய வேண்டுமானால் பல பாஷையாளர்க்கும் பொதுவாயிருக்கும் இந்துஸ்தானியைக் கற்கவேண்டுமென்று சொல்லித் தேசத்தலைவர்கள் அதனை வற்புறுத்துகின்றனர். சென்னை மாகாணத்தில் அது நடைமுறை அனுஷ்டானத்துக்கும் வந்து விட்டது. அதுபோல் இலங்கையிலும் வகுப்புவாதம் முதலிய பேய்கள் ஒழிந்துபோகவேண்டுமானால் தமிழர் சிங்களமும் சிங்களவர்கள் தமிழும் அவசியம் கற்கவேண்டும். இது மிகவும் சுலபமானகாரியம். திருநெல்வேலியில் இப்போது சம்ஸ்கிருதமும் சிங்களமும் கற்பிக்கப்பட்டு வருவது மேற்சொன்ன ஏற்பாட்டுக்கு அஸ்திபாரமாகும். இன்னும் யாழ்ப்பாணத்திலுள்ள எல்லாப் பாடசாலைகளிலும் சிங்களம் படிப்பிப்பார்களானால் கூடிய சீக்கிரம் இலங்கை ஒருசனநாடாகிச் சுதந்திர யுத்தம் நடத்துமெனத் துணிந்து கூறலாம்.

கதைப் பகுதி

# ஞானம்பாள்

[மயூரம் வேதநாயகம்பிள்ளை அவர்கள் எழுதிய பிரதாப முதலியார் சரித்திரச் சுருக்கம்]

(திரு. மா. பீதாம்பரன்)

Rights Reserved

(முற்றொடர்)

அவர்கள் எங்கள் சமீபத்தில் வருவதற்குமுன், குண்டுகள் போட்டுக் கெட்டிக்கப்பட்டிருந்த துப்பாக்கிகளை அவர்கள்மேலே பிரயோகித்தோம். குதிரையின் மேலிருந்த இருவர் தேகங்களிலும் குண்டுகள் பட்டுக் கீழே விழுந்து விட்டார்கள். பாதசாரிகளான இருவரும் ஓட்டம் பிடித்தார்கள். அவர்களைப்போய் வளைக்கும்படி என்னுடைய நேசருக்குஞ் சொல்லிய பின்பு, பண்டியிலிருக்கிற ஸ்திரீகள் இன்னாரென்று அறியும் பொருட்டு, நான் குதிரையை விட்டுக் குதித்தேன். வண்டியிலிருந்த இரண்டு ஸ்திரீகளில் ஒருத்தி என்னைக் கண்டவுடனே பெருஞ் சப்தமாய்க் கூவிக்கொண்டு, வண்டியை விட்டு என்முன்பாகக் கீழே விழுந்தாள். அந்தச் சத்தம் ஞானம்பாளுடைய குரலாயிருந்ததால், அவளை என் கையாலே தூக்கி நிறுத்தி, முகத்தை உற்றுப்பார்த்தேன். அவள் தேகத்தில் ஒரு ஆபரணமுமில்லாமல் ஆண்டிச்சிகள் போலக் காவிவஸ்திரம் தரித்துக்கொண்டு, முகத்தில் எதையோ பூசிக்கொண்டு, அழுக்குப்படிந்த தங்கப் பிரதிமை போல் உருமாறி இருந்தாள். அவளைப் பார்த்து, "ஞானம்பாள், ஏனிப்படியிருக்கின்றாய்?" என்று கேட்டேன். அவள் தேம்பித் தேம்பி அழுது கொண்டு, "என்னைச் சீக்கிரத்தில் பனம்பள்ளிக் கிராமத்துக்குக் கொண்டுபோய்ச் சேருங்கள். சகல காரியங்களையும் பிற்பாடு தெரிவிக்கிறேன்," என்று நடுநடுங்கிக் கொண்டு சொன்னாள். அவளை உடனே தூக்கி வண்டியில் உட்காரவைத்து, வண்டியைச் சீக்கிரமாய் விடும்படி வண்டிக்காரனுக்கு உத்தரவு கொடுத்து, நான் குதிரைமேலேறிக் கொண்டு, நானும் என் சிநேகிதரும் வண்டிக்கு முன்னும் பின்னுமாகப் போனோம். அன்றிராத்திரி எட்டுமணிக்குச் சம்பந்த முதலியாருடைய பனம்பள்ளிக் கிராமத்துக்குப் போய்ச் சேர்ந்தோம். அவ்விடத்திலே சம்பந்த முதலியாரும் பின்னும் அநேகரும் ஏகமாய்க் கூடி மூலைக்கு மூலை ஆளனுப்பியும் ஒரு செய்தியுந் தெரியாமல் அழுது பிரலாபித்துக்கொண்டு இருந்தார்கள். ஞானம்பாளைக் கண்ட மாத்திரத்தில் அவளைக் கூட்டிக்கொண்டு சம்பந்த முதலியாரும் அவர் பத்தினி முதலானவர்களும் பட்ட துயரமும் அழுத அழுகையும் இவ்வளவென்று சொல்லிமுடியாது. அவள் உருமாற்றமாய், அப்போதிருந்த கோலத்தைப் பார்த்தவர்கள் யார்தான் மனம் இளகாமலிருப்பார்கள்? அவள் அன்றைத்தின முழுவதும் அன்னபானாதிகளில்லாமற் பசிக்களையாயிருப்பதைத் தெரிந்து உடனே அவளையும் அவளுடன் கூடவந்த ஆண்டிச்சியம்மாளையும் ஸ்நாநம் செய்யும்படி சொல்லி, அவர்கள் போசனஞ் செய்தபிற்பாடு, அன்றைத்தினம் நடந்த விர்த்தாந்தங்களைச் சொல்லும்படி நாங்கள் கேட்க, ஞானம்பாள் சொல்லத் தொடங்கினாள்.

இன்றைத்தினம் விடியற்காலம் நாலுமணிக்கு இந்தக் கிராமத்திலிருந்து எல்லாரும் நம்முடைய ஊருக்குப் பிரயாணமாகும்போது, நானும் எழுந்து வெளியே வந்து எந்தப் பல்லக்கிலே ஏறிக்கொள்ளலாமென்று பார்த்து வருகையில், சில சிவிகையாளர் ஒரு பல்லக்கை எனக்குக் காட்டி, "இதில் ஏறிக்கொள்ளுங்கள், அம்மா" என்றார்கள். நான் உடனே அந்தப் பல்லக்கில் ஏறிக்கொண்டு, அப்போது அதிக இருட்டாயிருந்ததனால், கதவை மூடிக்கொண்டு, பல்லக்கிலே படுத்துக்கொண்டேன். பல்லக்குத் தூக்குகிறவர்கள் வழக்கப்படி சப்தமிட்டுக் கொண்டு, என் பல்லக்கையும் மற்றப் பல்லக்குகளையும் தூக்கிக்கொண்டு ஓடினார்கள். நான் உடனே கண்ணை மூடிக்கொண்டு நித்திரை போய்விட்டேன். பிற்பாடு சூரியோதயத்தில் நான் விழித்துப் பல்லக்கின் கதவைத் திறந்து பார்த்தபோது, தெற்குமுகமாய்ப் போகவேண்டிய பல்லக்கு வடக்குமுகமாய் ஓடிக்கொண்டிருப்பதாகத் தெரிந்தது. மற்றப் பல்லக்குகளும், வண்டி, குதிரை முதலிய வாகனங்களும் கூட வருகின்றனவா என்று அந்தப் பக்கமும் இந்தப் பக்கமும் எட்டி எட்டிப் பார்த்தேன். என் பல்லக்கைத் தவிர வேறே ஒரு வாகனத்தையாவது சொந்த மனுஷரையாவது நான் பாராதபடியால், எனக்குச் சந்தேகமுண்டாகி, சிவிகையாளரைக் கூப்பிட்டு, "பல்லக்கு வடக்கே போவதற்குக் காரணம் என்னவென்றும், மற்ற வாகனங்களெல்லாம் எங்கே" என்றும் கேட்டேன்.

(தொடரும்)

உல்லாச யாத்திரை—1.

# அனுராதபுரத்தின் — அழகிய காட்சிகள்

"மூர்த்தி"

அன்று இரவு முழுவதும் நித்திரையேயில்லை. காலை 2 மணிக்குப் புறப்படுவதாக ஒழுங்கு. மாலையிலேயே மூட்டை முடிச்சுகளைக் கட்டத் தொடங்கிவிட்டனர். பிரயாணஞ் சுபமாய் முடியவேண்டுமென்று ஆலயவழிபாடு செய்தவரும் பலர். காலை ஸ்நானத்தை அப்பொழுதே முடித்துக் கொண்டவருஞ் சிலர். படுக்கைக்குப்போக மணி பன்னிரண்டு அடித்தது. படுத்தும் நித்திரை வரவேயில்லை. பிரயாணத்தில் காணப்போகும் பல காட்சிகள் கண்முன் தோற்றின. சிறிது அயர்ச்சி உண்டாகுஞ் சமயம் வந்துவிட்டார்கள் "நேரமாகி விட்டது" என்று கூவிக்கொண்டு. மூட்டை முடிச்சுகள் முதலில் வண்டியில் ஏறிக்கொண்டன. மணி இரண்டு அடித்தது. எல்லோரும் வந்து வண்டியில் ஏறிவிட்டனர். மின்சார ஊதுகுழல் சப்தத்துடன் வண்டி புறப்பட்டது. ஆனையிறவில் சற்று விழித்துப் பார்த்தோம். கடற்காற்று சில்லென்று வீச வண்டி பாலத்தைக் கடந்து சென்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டிலிருந்து வெளியேறிவிட்டோம். பரந்தனில் நெல்வயல்களும் பல கட்டிடங்களும் காணப்பட்டன. நிலவாயிருந்ததால் விழித்திருந்தவர்களுக்கு இவை நன்றாய்த் தோன்றின. நடுக்காட்டில் வண்டி நிற்பாட்டப்பட்டதும் திகைத்துப்போனேன். மனதில் பயமேற்பட்டது. வண்டியில் வைத்திருந்த தேங்காய்களை எடுத்துக்கொண்டு சாரதி இறங்கினார். நாமும் இறங்கினோம். அந்தப் பெரியகாட்டில் ஓர் பிள்ளையார். அவர்தான் முறிகண்டிப் பிள்ளையார். நெடுநாட்களாக இவரைத் தரிசிக்க வேண்டுமென்று எண்ணமிட்டுக் கொண்டிருந்தவர்களுக்கு மகா ஆனந்தம். நெஞ்சார வணங்கிவிட்டுப் பழையபடி வண்டியில் ஏறிக்கொண்டோம். வண்டியும் காடுகளுக்கூடாக வாயுவேகமாக ஓடியது. ஏனெனில் தொந்தரவு கொடுப்பதற்கு வேறு வண்டிகளாவது சனங்களாவது இந்தவழியிலே இல்லை. 'காட்டிலே களைத்து வருபவர்க்கு உணவளிப்பதற்கு மாங்குளத்திற் சில போசனசாலைகள் உண்டு. இங்கு மானிறைச்சியுடன் புசிக்கலாமெனச் சிலர் சொன்னார்கள். மாங்குளத்திலிருந்து கிழக்கு முகமாகச் செல்லும் வீதி முல்லைத்தீவிற்குச் செல்கிறது. மாங்குளம் புளியங்குளம் என்பவைகள் குளங்களல்ல. அவை அவ்விடத்தின் பெயர்கள்.

வவுனியா ஒரு சிறு நகரம். ஆனால் நமக்கல்ல. சுற்றியுள்ள வனங்களில் வசிப்பவர்களுக்கு அது ஒரு பெரும் நகரமே. இப்போது கச்சேரி, நீதிஸ்தலம் என்பனவும் இங்கேயுண்டு. இரு பாடசாலைகளும் இருக்கின்றன. வியாழக்கிழமை தோறுஞ் சந்தை கூடுகின்றது. சந்தையில் மரவள்ளிக்கிழங்கு, பனாட்டு முதலியவற்றைக் கண்டதும் நம்மவர்க்கு யாழ்ப்பாண ஞாபகம் வந்துவிட்டது. பழையபடி வண்டி காடுகளின் நடுவிற் சென்றது. தூரத்திற் செல்லும்பொழுதே ஒரு பெரிய கோபுர நுனி வெள்ளிமயமாகத் தோற்றியது. இதுவே 'ருவன்வெல்லே'ச் சமாதியென நண்பர்கள் கூறினார்கள். அனுராதபுர நகரைச் சமீபிக்க ஆயிரக்கணக்கான கருங்கற் றூண்கள் நிமிர்ந்தும், சாய்ந்தும் நிற்பது கண்களிற் பட்டன. அனுராதபுரத்தில் யாழ்ப்பாணத்துப் பிரபு ஒருவர் இருக்கிறார். தயவுகூர்ந்து அவருடைய பெயரைக் கேட்கவேண்டாம். அதை மறந்துவிட்டேன்...இல்லை. அதைச் சொல்ல எனக்கு விருப்பமில்லை. முன்னடியே அவருக்கு அறிவித்திருந்தோமாகையால் காத்திருந்து எங்களை வரவேற்றார். [illegible]டைய அழகிய வீட்டில் விருந்தாளிகளுக்கென்று ஒரு தனியறை ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றது. காலைப்போசனம் முடிந்ததும் அனுராதபுரத்தின் அழகைப் பார்க்கப் புறப்பட்டோம். அவர் வண்டி முன்னே சென்றது. எங்கள் வண்டி அதைத் தொடர்ந்தது. சில கருங்கற் றூண்களின் முன் வண்டிகள் நிறுத்தப்பட்டன. இறங்கி உள்ளே சென்றோம். 'நிரைக்கு நாற்பது தூணாகச் சதுராகாரமாய் நிறுத்தப்பட்ட ஆயிரத்தறுநூறு கருங்கற் றூண்களின்மேல் நிலைக்கு நூறு அறையாகத் தொளாயிரம் அறைகொண்ட ஒன்பது நிலை மாடமாகக் கட்டப்பட்டுச செப்புத் தகட்டால் வேயப்பட்டுப் புத்தகுருமாரின் வாசஸ்தானமாய் இருந்தது' என்று இலங்கைச் சரித்திரத்தில் விபரிக்கப்பட்ட பெரிய செப்பு மாளிகை எனப் பொருள்படும் "லோவமகாபாயா" இப்போது சில கருங்கற் றூண்களாகக் காணப்படுவதைக் கைமுனு பார்க்க நேர்ந்தால் எவ்வளவு சீற்றங் கொள்ளுவார். நல்ல வேளை அதைக் கட்டுவித்த கைமுனு இப்பொழுது அனுராதபுரத்தில் இல்லை.

இதற்கு முன்புறத்தில் மகாவிகாரை நால்நிலையமும், வெள்ளரச மர ஸ்தலமுங் காணப்படுகின்றன. நால்நிலையத்தின் மேல்மாடியில் பாளி பாஷையில் எழுதப்பட்ட அனேக ஏடுகளும், ஏராளமான விக்கிரகங்களுங் காணப்படுகின்றன. மிகுந்தனின் தங்கை சங்கமித்தையுடையன எனக் கூறப்படுஞ் சில உடைகள் இங்கு வைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றிற் சில தங்கத்தாற் செய்யப்பட்டனவாம். கல்லாற் கட்டப்பட்ட ஓர் மேடையின்மேலே தென்படுவதே வெள்ளரசமரமாம். இதைச் சுற்றி அனேக சாதாரண அரசமரங்களுங் காணப்படுகின்றன. கி. மு. 300-ம் ஆண்டளவில் சங்கமித்தையாற் கொண்டுவரப்பட்டு உண்டாக்கப்பட்ட இவ்வெள்ளரச பார்வைக்கு ஒரு சிறிய மரமாகவே காட்சியளிக்கிறது. மார்க்கண்டர்க்கு என்றும் பதினாறுவயசாய் இருந்ததுபோல் இந்த அரசமரத்திற்கும் எப்போதும் ஓர் பருப்பமாயிருக்க யாராவது வரங் கொடுத்தார்களோ என்னவோ? ஆனால் இதன் அடிப்பாகம் கல்மேடையுள் இருப்பதாகக் கூறுகிறார்கள்.

சிறிது தூரத்தில் துட்டகைமுனுவால் கட்டப்பட்ட மிகப் பெரியதாகிய 'ருவன்வெல்லே'ச் சமாதி கிடக்கின்றது. பாழடைந்து மேடாய்க் கிடந்த இச்சமாதி இப்பொழுது புதுப்பிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இதன் வேலை முடிய இன்னுஞ் சில காலஞ் செல்லும். (தொடரும்)

(வானாதி தத்துவமாய் மன்னிநின்ற காரணநீ, நானாகி நிற்பதெந்த நாளோ பராபரமே.

# தமிழின் சிறப்பு

நந் தாய்மொழியாகிய தமிழிலுள்ள ழகர ஓசை வேறெப் பாஷையிலும் இல்லை. அவ் ழகர ஓசை தமிழ் என்னுஞ் சொல்லிலேயே யிருப்பது, தமிழுக்கு இன்னும் பெருஞ் சிறப்பை நல்குகின்றது. பாஷையைக் குறிக்கும் தமிழென்ற சொல்லுக்கே 'இனிமை' என்பது பொருளாதலால் தமிழுக்கு இன்னும் பெருஞ் சிறப்புண்டாகிறது. பல பாஷைகளை நன்ருக வாராய்ந்து கற்ற சுப்பிரமணிய பாரதியார் அவர்களே,

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல்
இனி[illegible]தெங்குங் காணேம்." என்றும்,

"செந்தமிழ் நாடென்னும் போதினிலே
யின்பத் தேன்வந்து பாயுது காதினிலே."

என்றும் கூறியிருப்பின் யாம் புகலவல்லது என்னே.

பாண்டிநாட்டிலே தமிழை வளர்க்க, முறையே முதல், இடை, கடை என்று 3 சங்கங்கள் இருந்தனவென்று நக்கீரர், இறையனர்அகப்பொருளுரையில் எழுதியதின்படி முதற் சங்கமானது, ஏறக்குறைய 10,000 வருஷங்கட்கு முன் இருந்ததென்றும், அக்காலத்திலே அகத்தியர் தமிழுக்கு இலக்கணஞ் செய்தார் என்றும் கூறப்படுகிறது. இலக்கணஞ் செய்வதற்குப் பல வருடங்கட்கு முன் இலக்கியம் இருந்திருக்கவேண்டும். ஆகவே, இலக்கியம் இருந்திருப்பதற்கு முன்னமேயே தமிழ்ப் பாஷை இருந்திருக்கவேண்டும். ஆதலாற் றமிழின் பழமை வரையறுக்க முடியாததாயிருக்கின்றது.

உலகில் லற்றின், சமஸ்கிருதம், கிறீக் முதலிய அநேக பாஷைகளுண்டு. ஒவ்வொரு பாஷையிலிருந்தும் அநேக கிளைப் பாஷைகள் தோன்றின. இதைப்போலவே தமிழிலிருந்தும் கன்னடம், தெலுங்கு, மலையாளம், துளு வென்னும் கிளைப்பாஷைகள் தோன்றின. ஆரியமோ எழுத்து வழக்கில்மாத்திரமே யிருக்கிறது. தமிழானது தோன்றியபோது எவ்வளவு சிறப்பாகவிருந்ததோ இப்போதும் அதுபோலவே யிருக்கிறது. இதையே திருவனந்தபுரம் சுந்தரம்பிள்ளை மனோன்மணியத்தில்,

"பல்லுயிரும் பலவுலகும் படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறு பரம்பொருள்முன் இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும் களிதெலுங்கும் கவின்மலையா ளமுந்துளுவும்
உன்னுதரத் துதித்தெழுந்தே ஒன்றுபல ஆயிடினும்
ஆரியம்போல் உலகவழக் கழிந்தொழிந்து சிதையாவுன்
சீரிளமைத் திறம்வியந்து செயல்மறந்து வாழ்த்துதுமே."

என்று கூறியிருக்கின்றார்.

ஒரு பாஷை சிறப்படையவேண்டுமாயின் இனிய இலக்கியங்கள் இருத்தல்வேண்டும். மற்றெப்பாஷைகளிலும் சிறப்பானது எனக் கருதாவிடினும், சிறப்பான கலித்தொகை, சிலப்பதிகாரம், திருக்குறள், இராமாயணம் போன்ற பல இலக்கியங்களால் புலவர்கள் வளம்படுத்தினர்.

பிற்காலத்திற் றமிழிற் சிறந்த இலக்கியம் 'இராமாயணம்' எனப்படும். இராமாயணத்தைக் கம்பர் இயற்றினர். இதனாலேயே பாரதியாரும்,

"......கம்பனைப்போல் வள்ளுவனைப்போல் இளங்கோவைப்போல்
பூமிதனில் யாங்கணுமே பிறந்ததில்லை"

என்று கூறியுள்ளார் கம்பர், திருவள்ளுவர், இளங்கோவை முதலிய அறிஞர்களைப் பெற்றதினால் தமிழ் மிகவுஞ் சிறப்பையடைந்தது. திருக்குறளானது அறம், பொருள், இன்பம், வீடு ஆகிய இவற்றை யூட்டும் நூல். இது தமிழ்ப்பாஷையிலேயே யுண்டு. பின் இதைப் பல பாஷைகளிலும் மொழிபெயர்த்தனர். இதை முன்னிட்டே பாரதியாரும்,

"வள்ளுவன் றன்னை யுலகினிற்கே தந்து
வான்புகழ் கொண்ட தமிழ்நாடு"

எனத் திருக்குறளின் சிறப்பையு மதனாற் றமிழடைந்த பெருமையையும் கூறியுள்ளார். பாஷைகளை வரம்புகட்ட விலக்கணம் வேண்டும். மற்றப் பாஷைகளிலே சொல்லிலக்கணமும், எழுத்திலக்கணமும் மாத்திரமே யுண்டு. ஆனல் மற்றெப்பாஷைகளிலும் பார்க்கத் தமிழில் 'பொருளிலக்கணம்' என்பதும் அமைக்கப்பட்டிருக்கிறது. பொருளிலக்கணம் அகம், புறமென இருவகைப்படும். அகம், தலைவன் தலைவியர்க்கிடையே யுண்டாகும் இன்ப நிகழ்ச்சியைக் கூறுவது. புறம், அரசாட்சி, கல்வி, போர் முதலியவற்றைக் கூறுவது. ஆகையாற் பொருளிலக்கணம் தமிழுக்கு மிகச் சிறப்பைக் கொடுக்கிறது. கடவுளைச் சிந்தித்து அடையப் பக்தி வேண்டும். இப் பக்தியைப் பெருக்கும் தேவாரம், திருவாசகம், திருப்புகழ் முதலிய நூல்கள் தமிழிலேயே யுண்டு. இந்நூல்களிலே பல அற்புத நிகழ்ச்சிகள் கூறப்படுகின்றன. இதையே சிவஞான சுவாமிகள்

"தொண்டர்நாதனைத் தூதிடை விடுத்ததும் முதலை
யுண்டபாலனை யழைத்ததும் என்பு பெண்ணுருவாக்
கண்டதும் மறைக் கதவினைத் திறந்ததும் கன்னித்
தண்டமிழ்ச் சொற்களோ புறச்சொற்களோ சாற்றீர்"

என்று கூறியிருக்கிறார். தமிழானது இனிமையுடைமையாலும், அநேக வருஷங்களுக்கு முன்னேயே தோன்றி வரையறுக்க முடியாத பழமை வாய்ந்தமையாலும், அகம், புறம் என்னும் துறைகள் அமைந்திருப்பதாலும், பக்தியூட்டும் நூல்கள் பொலிந்திருப்பமையாலும், அப் பக்தர்களது தமிழ்ச் சொற்கள் அநேக அற்புதங்களைச் செய்தமையாலும், மற்றெப்பாஷைகளிலும் பார்க்கச் சிறப்புடையது என வறியக்கிடக்கிறது.

"வாழ்க தமிழ்மொழி, வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே"

வ. சின்னத்தம்பி
சித்திவிநாயகர் வித்தியாலயம், பருத்தித்துறை.

காட்டத்தில் அங்கி உடையவந்தால் எவ்வளவுன்னும், காட்டத்தி னுடுவந்த நட்பே பராபரமே.

## செவிட்டு விஸ்வநாதம்பிள்ளை

விஸ்வநாதம்பிள்ளை ஒரு பிறவிச் செவிடர். அவருக்கு ஓர் அரிய நண்பர் முத்தையாபிள்ளை யென்பவர் இருந்தார். இவர்கள் இருவரும் சுன்னாகத்திலே வசித்துவந்தார்கள்.

முத்தையாபிள்ளைக்குத் திடீரெனக் காய்ச்சல் வந்தது. அப்பொழுது விஸ்வநாதம்பிள்ளை அவரைப் பார்ப்பதற்காகச் சென்றார். சந்தையடியில் போனவுடன் விஸ்வநாதம்பிள்ளை பின்வருமாறு யோசிக்கத் தொடங்கினார்.

நானோ பிறவிச் செவிடன். எனக்கு அவர் சொல்வது ஒன்றும் கேட்காது; ஆனபடியால், நான் போனவுடன் அவரை எப்படிச் சுகம் என்று கேட்பேன். அதற்கு அவர் நல்ல சுகம் என்பார். அதற்கு நான் அப்படியே நெடுக இருக்கட்டும் என்பேன். பின்பு என்ன சாப்பாடு என்று கேட்பேன்; அதற்கு அவர் கஞ்சிதான் சாப்பாடு என்பார். அதற்கு நான் மிகவும் நல்லது என்பேன். பின்பு நான் யார் வைத்தியன் என்று கேட்பேன்; அப்போ அவர் யாராவது ஒரு வைத்தியனின் பெயர் சொல்லுவார்தானே? அதற்கு நான் அவன்தான் நல்ல வைத்தியன் சிக்கிரம் குணப்படுத்துவான் என்பேன். இப்படிப் பல எண்ணங்களை எண்ணிக்கொண்டு அவன் வீடுபோய்ச் சேர்ந்தான். அங்கு சென்றவுடன் ஒரு நாற்காலியில் அவன் பக்கத்தில் அமர்ந்தார். பின்பு எப்படிச் சுகமென்று கேட்டார். அதற்கு அவர், மிகவும் மென்மையான குரலில் இப்ப மிகக் கடுமையாகத்தான் இருக்குது என்று சொன்னார். அதற்கு இவர் அதுதான நல்லது கடவுளே அப்படியே இருக்கட்டும் என்று சொன்னார். அப்பொழுது அவனுக்குக் கோபம் வந்துவிட்டது. அவன் கோபத்தைக் காட்டாமல் இருந்தான். பின்பு இவர் என்ன உணவு சாப்பிடுகிறாய் என்று கேட்டார். அதற்கு அவன் கோபத்தில் மண்தான் சாப்பிடுகின்றேன், வேறென்ன உணவு என்று சொன்னான். அதுதான் நல்லது அது உண்டால், கெதியாகச் சுகப்படுத்தும் என்று இவர் சொன்னார். அப்போ அவனுக்குக் கோபம் அதிகமா வந்தது.

பின்பு இவர், யார் வைத்தியன் என்று கேட்டார். அதற்கு அவன், யார் வைத்தியன் எமன்தான் என்று சொன்னான். அதற்கு இவர் அவன்தான் நல்ல வைத்தியன் சீக்கிரத்தில் குணப்படுத்துவான் என்றார். அவனுக்கு அப்போ நெருப்புப் பொறிபோல் கோபம் வந்தது. அப்பொழுது அவன் பக்கத்தில் இருந்த விளக்குமாற்றால் விஸ்வநாதபிள்ளைக்கு இரண்டு அடிகொடுத்து வீட்டிற்கு அனுப்பிவிட்டான். வரும் வழியில்தான் விஸ்வநாதருக்கு விஷயம் விளங்கிற்று.

"தாத்தாவுக்கும் பாட்டிக்கும் வந்தனம்."

(94) சே. சேகராசசிங்கம்,
வயித்தீஸ்வரவித்தியாலயம்
7-ம் வகுப்பு

## "மஞ்சவொண்ணு"

இராமநாதர் ஓர் கமக்காரன். அவரின் சகோதரியும், கணவனும், பிள்ளைகளும் கமத்தொழிலே செய்கிறவர்கள். இராமநாதருக்கு ஒரு மகனுண்டு. அவர் 'மட்றிக்' படிக்கின்றான்.

இராமநாதரும், சகோதரி பொன்னம்மாவும் தந்தையின் ஆதனத்தை சமகூறாகப் பங்கிட்டுக்கொண்டனர். இது விவாக காலத்தில் நடந்த விடயம்.

தற்பொழுது இருவருக்கும் மனம் சரியில்லை. எச்சுப்பேச்சு அடிபிடியில் வந்தது. எல்லை வழக்கு; ஓர் மஞ்சவொண்ணு இவர்களைப் பிரித்து [illegible]. மஞ்சவொண்ணு ஆருக்குரியது?

கிராமக்கோட்டார் இராமநாதருக் குரியதென்றனர். பொன்னம்மா கிராமச்சங்கத் தலைவரைப் போக்கிலி என்கின்றாள். தீர்ப்பு ஏற்கப்படவில்லை.

சிவில் வழக்கு முடிந்தது. கோடாகோடி. ரூபா 1000 வரையில் ஒரு கட்சிக்குச் செலவு. அப்பீல் கேட்டாயிற்று. 300 பவுண் அப்பீலில் இரு பிரிவுக்கும் செலவானது. கிராமக்கோட்டாரின் தீர்ப்பு தீர்ப்பாயிற்று.

இராமநாதர் மகன் தந்தையைக் கோட்டிற்குப் போகவேண்டாமெனத் தடுத்தார். "தம்பியும் பேச ஆளாய் விட்டாயோ" என்றார் தகப்பனார். அப்பீலில் வெற்றி பெற்றதே இராமநாதர் சந்தோஷப்பட்டார். பொன்னம்மாவின் கணவனுக்கும், மச்சானுக்கும் சண்டை உண்டாயிற்று. மண்டையும் உடைந்தது. வழக்குக் குற்றம் 80 ரூபா; செலவு 200 ரூபா.

நடுநிசி 'மட்றிக்' படிக்கும் செல்வராசனுக்கு நித்திரை வரவில்லை. இவ்வளவு செலவுக்கும் யார் காரணம். அண்ணன் தங்கை ஒற்றுமையாய் வாழாமைக்குக் காரணம் என்ன? என யோசித்தவர் "ஆம், ஆம்" என எழுந்து வெளிப்பட்டார்,

மறுநாள் மஞ்சவொண்ணைக் காணவில்லை. சண்டையுமில்லை, ஒன்றுமில்லை. இவ்விதம் எங்கும் நடக்கின்றது. உணர்ந்தால் யாரும் இப்படி நடக்கமாட்டார்கள். கற்பனையானாலும், கதை நடக்கத்தக்க தொன்றாகும்.

(23) [illegible]. தங்கமணி,
[illegible]பிரகாச வித்தியாசாலை, மூளாய்.


ஆங்கில J. S. C, S. S. C. வகுப்புக்குரிய

**தமிழ் இலக்கியபாட புத்தகங்கள்**

| | |
|---|---|
| நளவெண்பா கலிதொடர் காண்டம் முதல் 100 செய்யுள் - உரையுடன் | 60 சதம் |
| இராமாயணம் – பாலகாண்டம் அகலிகைப்படலம் உரையுடன் | 60 சதம் |

**தனலக்குமி புத்தகசாலை, சுன்னாகம்.**

ஏனைய புத்தக வியாபாரிகளிடமும் பெற்றுக்கொள்ளலாம்.


நித்திரையாய்த் தானே நினைவடர்ந்தால் நித்தநித்தஞ் செத்தபிழைப் பானதெங்கள் செய்கை பராபரமே

# “டிரைவர்”

பவன்

நான் அன்று பார்த்தசாரதிஐயர் வீட்டுக்கு, ஏதாவது பொழுது போக்கலாம் என்று எண்ணிக் கொண்டு போனபோது, அவர் ஏதோ ரொம்ப ரொம்பச் ஸ்வாரஸ்யமாக எழுதிப் பொழுதைப்போக்கிக்கொண்டிருந்தார். நான் அவர் கண்களிற் படாமற் சென்று மெதுவாக அவர் பின்புறத்தை அடைந்து என்ன எழுதுகிறார் என்று கவனித்துக்கொண்டு நின்றேன். அவர் அதை எழுதி முடித்துவிட்டுத் திருப்பித் திருப்பி வாசிக்கத் தொடங்கினார்.

நான் பொறுமையை இழந்தவனாய், “ஓய் என்னங்காணும் அவ்வளவு ஸ்வாரஸ்யமாய்ப் படித்துக் கொண்டிருக்கிறீர்,” என்றேன். அவர் திடுக்கிட்டுத் திரும்பிப் பார்த்து “அடடா...வரதராஜரோ...இவ்வளவு நேரமும் எங்கேகாணும் நின்று கொண்டிருந்தீர்” என்றார் பல்லை இளித்துக்கொண்டே “சும்மா இங்கேதான் நின்று கொண்டிருந்தேன் உதென்னையா வாசிக்கிறீர்” என்றேன் நான். அவர் கொஞ்சம் மூக்குக் கண்ணாடியை உயர்த்தி நெற்றியின்மேல் விட்டுக்கொண்டு, “இந்தா பாரும் கொஞ்சநாளைக்கு முந்தி யாரோ “ஈழகேசரி கல்வி அனுபந்தத்திலே” ‘கொண்டக்றர்’ என்று ஒரு விஷயம் எழுதினாரே! அதைப் பார்த்ததும் என் டிரைவரைப்பற்றி எழுதக்கூடாது என்று எண்ணினேன். அடுத்த நிமிஷமே இந்தக் கட்டுரையை எழுதிவிட்டேன். “அதிர் வேட்டு” என்ற பத்திரிகைக்கு இதை அனுப்புவதாக உத்தேசம். இதோ நீரும் ஒருதரம் வாசித்துப் பாருமேன்” என்று கூறிக் கட்டுரையை என் கையில் வைத்தார். நான் உடனே (வாசித்து விட்டபடியால்) ‘எனக்கு இப்போ அவகாசமில்லை. வீட்டிலே கொண்டு போய் பார்த்துவிட்டுக் கொண்டுவருகிறன்” என்று அவரிடம் ஒரு அண்டப் புழுகைச் சொல்லிவிட்டு, வீட்டிற்குப் போகாமல் நேரே தபாற் கந்தோருக்குப் போய் அந்தக் கட்டுரையைத் தபாலிற் சேர்த்துவிட்டு வந்தேன். அந்தக் கட்டுரையைத்தான் இதோ நீங்கள் படிக்கப் போகிறீர்கள்.

கொண்டக்றர் வேலையைப்போல அவ்வளவு சுலபமாகப் பெறக்கூடியதல்ல டிரைவர் வேலை. டிரைவராக விரும்பும் ஒருவன், கொஞ்சம் கார் ஓட்டக் கற்றுக்கொண்டதும், அவருக்கும் இவருக்கும் பணத்தைக் கையில் வைத்து “லைசென்ஸை”ப் பெற்றுவிடுகிறான். ஆனால் அப்புறந்தான் வில்லங்கம்.

அதோ காரிலே தன் வருகின்ற நண்பனைக் கண்டதும், கையைக் காட்டிக் காரை நிறுத்தும்படி கேட்கிறான். அப்புறம் தானும் வருவதாகக் காரில் ஏறிக்கொண்டு கொஞ்சதூரம் சென்றதும் “அண்ணே! நீ சும்மாயிரு. நான் காரை விடுகிறேன்” என்று நண்பனிடம் கூறுகிறான். “பரவாயில்லை நானே, விடுகிறேன்” என்று தட்டிக் கழிக்கப் பார்க்கிறான் நண்பன். ஆனால் நம் கதாநாயகனோ சும்மா விருப்பவனாயு் இல்லை. “ஹூம்....நான் விடமாட்டேன் என்று நினைக்கிறாயாக்கும். நான் உந்தத் தேசாதி தேசமெல்லாம் கார்விட்டுத் திரிஞ்சனானெல்லே? கொழும்பு ரவுணிலேகூட எத்தினையோ நாள் ஓடினனான் காணும். அப்ப ஒன்றும் ஓராயில்லை. இப்பதான் என்னவோ வரப்போகுதோ? என்று ஒரு கயிறு திரிக்கிறான். கடைசியாக நண்பன், முகத்துக்கு முட்டுப்பட்டு விட்டு விடுகிறான். புது டிரைவர் காரைச் செலுத்திக்கொண்டு போகும்பொழுது கார் பாதையிலிருந்து கொஞ்சம் விலகுகிறது. டிரைவர் அதை நேராகக் கொண்டு வருவதாக எண்ணிக்கொண்டு பக்கத்திலுள்ள வயலிற் செலுத்தி விடுகிறார். அப்புறம் கேட்பானேன். கார் ஏதோ சந்தோஷங் கொள்வதுபோல் ஒரு பல்டி அடிக்கின்றது. அடுத்த நிமிஷம் “காரைச்”ச் சுற்றிக் கூட்டம். டிரைவருக்கும் நண்பருக்கும் படுகாயம். வெட்கம், பொருட்சேதம். இப்படியே ஒரு டிரைவர், “காரை”ச் செலுத்துவதற்கு லாயக்காகுமுன்பே எவ்வளவோ இடஞ்சல்கள். இதற்கிடையில் சிலசமயம் ஆளுக்கே மோசம் வந்தாலும் வந்துவிடும்.

“சரி...பரவாயில்லை. செலுத்தக் கற்றுக்கொண்டபின் எல்லாம் சுலபமாய்ப் போய்விடும். நல்ல சம்பளம் கிடைக்கும்” என்று நினைக்கிறீர்களா? அது ரொம்பத் தவறு.

ஒரு டிரைவர் ஒரு “பஸ்”ஸைச் செலுத்திக்கொண்டு போகும்பொழுது, தனக்கு முன்னாக மேலேயுள்ள கண்ணாடியையும் பஸ் போகும் பாதையையும் ரொப்ப அவதானமாய் கவனிக்கவேண்டும். முன்னுக்குக் கவனியாமல் விட்டாலோ பஸ் எங்கேயாவது போய் முட்டிக் கொள்ளும். கண்ணாடியைப் பார்க்காமலிருக்கும்போது கொண்டக்ராரும் அசாக்கிரதையாய் இருந்துவிட்டாலோ சில சமயங்களில், வேறே “பஸ்”காரர் யாராவது வந்து விலத்திக்கொண்டு பறந்துவிடுவான். அப்புறம் அவனைத் தொடர்ந்து ஓடவேண்டும் முன்னுக்குப் போகும் “பஸ்”ஸை யாராவது ஒரு முட்டாள் பொலீஸ்காரன் திடீரென்று நிறுத்திவிட்டாலோ பின்னுக்குப் போன வேகத்தில் முந்தின “பஸ்”ஸோடு மோதவேண்டியதுதான். அடுத்த நிமிஷம் பொலீஸ்காரன் வந்துவிடுவான். அவனுக்கு ஏதாவது கையில் வைத்து “அண்ணை, தம்பி” என்று சொல்லிவிடவேண்டும். இப்படியே எத்தனையோ கஸ்டங்கள். அப்பப்பா! சொல்லத்தரமில்லை. அதுவும் ஏதாவது தினங்களாயிருந்துவிட்டால் தலைகால் புரிவதில்லை. அத்தினங்களில் டிரைவர், “பௌடர்” (றோட்டுப் புளுதி) அணிந்துகொண்டு காட்சி அளிப்பார்.

இனி யாராவது ஒருவனை “பஸ்”ஸால் அடித்துவிட்டாலோ அந்த இடத்தில் நிற்கவேகூடாது. நின்றால் “தலை தப்பட்டம் உடல் உப்புக்கட்டி”யாக வேண்டியதுதான். ஓடிவிட்டால் அப்புறம் பொலீஸ்காரனையும் அழைத்துக்கொண்டு ஸ்தலத்திற்கு வரவேண்டும். அப்

# "பெருந்தன்மை"

மக்களாவார்க்கு இன்றியமையாது இருக்கவேண்டியது பெருந்தன்மை. அது செயற்கரிய செய்தல், தருக்கின்மை, பிறர் குற்றங் கூறுமை என்ற இவை முதலிய நற்குணங்களால் உண்டாவது.

நிலையில் மேன்மேலும் உயர்த்துவதாகிய இதற்குத் தன்னிலையில் தாழாமையும் ஒரு தலையாக வேண்டப்படுவதாம். நாம் பிறரால் செய்தற்கரிய காரியத்தையே செய்ய முயல்வோம் என்றெண்ணி முயலும் ஊக்கம் மிகுதி உள்ளவராய ஒவ்வொருவரும் பெருமைக் குரியவரே.

அந்த ஊக்கம் அளவிறந்து செய்யும் உதவியாலும், கொடையாலும் பழகுவதாம். எல்லா மக்களுக்கும் படிப்பு பொதுவாகுமாயினும் செய்கின்ற தொழில்களால் சிறப்பியல்புகளும் வேறு உண்டு. பிறரால் செயற்கரிய செயல்களைச் செய்யாது செய்தற் கெளிய செயல்களையே செய்துகொண்டு திரிபவர் உயரிய இடங்களில் இருப்பாராயினும் பெரியாராகார். செய்தற்கரிய செயல்களையே செய்து முடிப்பவர், சிறிய நிலையில் இருப்பாராயினும் அவர் சிறியாராகார்; பெருந்தன்மைக்குரிய பெரியாரே.

தனது கற்பு நிலையினின்றும் வழுவாத பெருமிதத்தோடு விளங்கும் பத்தினிப் பெண்டிர்களது செயல் போலத் தனது நிறை குணத்தினின்றும் வழுவாது தன்னைக் காத்துக் கொள்ளும் குணமுடையோனிடத்திலேயே பெருந்தன்மை தங்கியிருக்கும்.

இது, மனம் மொழி மெய்களை ஒடுக்கி ஒப்புரவு முதலிய செய்து வாழ்வதால் வளருவது. இங்ஙனம் பெருமையைப் பெற்றவரே வறியவரான காலத்தும் செயற்கரிய செயல்களைச் செய்து முடிக்கும் திறனுடையவராவார்.

இத்தகைய சீரியரது பெருமையை உணரும் வன்மை சிறியாரிடைக் காணல் அரிதாம். அச்சிறியார் தங்கள் தங்களிடத்துள்ள குடிமை, செல்வம், கல்வி என்ற இவற்றைக்கண்டு வியந்திருப்பர். இவை அப்பெரியாரிடத்தில் இயல்பாகவே அமைந்து கிடப்பன என்பதை அறியமாட்டார். அன்றியும் இப்பெரியாராகிய பெருந்தன்மை மிக்காரிடத்து நின்று பெரும்பயனை விளைவிக்கும். சிறியாரிடத்துத் தோன்றின் செருக்குக்குள்ளாக்கி இடும்பையை ஊட்டும். பெருந்தன்மை மிக்கார் என்றும் பணிந்தே நடப்பர். சிறியார்போல் தறிதலையாகத் திரியமாட்டார். பெரியோர் பெருமை பேசிக் கொள்ளத்தக்க காரணமிருந்தும் அங்ஙனம் செய்யமாட்டார். பிறருடைய பெருமையே பேசுவார். இத்தகைப் பெரியாரே எல்லாக் குணங்களாலும் நிறையப்பெற்ற சான்றோராவார்.

இது செய்யத்தகுவது, இது செய்யத்தகாதது என்று உணர்ந்து அறிவுசான்ற பெரியோர்க்கு நல்லனவாய குணங்களெல்லாம் இயல்பாகவே அமைந்திருக்கும் குணநலமே நலமாவது. உறுப்புக்களின் நலம் எதும் நன்மையைத் தருவதாகாது. சுற்றத்தார் மேலன்றிப் பிறர் மாட்டும் செல்லும் அன்பு, பழிபாவங்களுக்கு நாணல், யாவர் மாட்டும் உபகாரம் புரிதல், பகைவர் மேலும் கண்ணோட்டம் கொள்ளல், எவ்விடத்தும் உண்மை நிலை பிறழாதிருத்தல் என்ற இந்த ஐந்துமே சான்றாண்மையைத் தாங்கும் தூண்களாம்.

ஓருயிரையும் கொல்லாத அறச்செயலால் நலம் என்பது போல, பிறருடைய குற்றங்களைச் சொல்லாத அறச்செயலால் வளருவது சான்றாண்மை. அச்சான்றாண்மையின் அறிகுறியாகிய அடக்கமே, பகைவரை மாற்றும் படையாவது. தன்னைப் பிறர்க்குத் தாழ்ந்தவன் என்று கூறிக் கொள்வதில் வெட்கப்படாதவனே சான்றாண்மை மிக்கவனாவான். தனக்குத்துன்பம் செய்தவர்க்கும் நன்மை செய்ய முயலாராயின் அவர் சான்றவராகார். சான்றோர்க்கு வறுமை எங்ஙனும் இழிவைத்தருவதொன்றன்று. சான்றோர் ஊழிக்காலத்திலும் தம் நிலை பிறழமாட்டார். அன்னார் தம்நிலை தவறின் உலகமுந் திரிந்துவிடும், என்பர் மேலோர். இச்சான்றோரே உலகினரைத் தம்வசப் படுத்தற்குரியவராவார் அன்னார், யாண்டும் நீதியையும் அறத்தையுமே விரும்புகின்றார்.

ஆதலின் உலகினரால் பெரிதும் கொண்டாடப்படுவார், விளையாட்டாகக் கூடப் பழித்தலைச் செய்யலாகாது என்ற கோட்பாட்டினையுடையவர். பெருந்தன்மையும் சான்றாண்மையும் நிறைந்து எனைக் குணங்களையும் பெற்றுள்ள பண்புடையவர்களைப் பெற்றிராத உலகம் இருப்பதிலும் இல்லாதிருத்தல் நலமாம். ஏனெனில் அவை நிரம்பியிராத மக்கள். மக்கள் உருவினராயினும் மரம் போன்றவரே. பண்பில்லாரது செல்வம் பாத்திரத்தின் கெடுதலால் சுவை கெட்டுப்போன பாலுக்குச் சமமாம். ஆதலால் மக்களாய்ப் பிறந்தார் ஒவ்வொருவரும் பெருந்தன்மை உடையாராய் சான்றாண்மை பூண்டு பண்பின் மிக்க அன்புற்று இன்புற்று வாழ்ந்து உலகினை இன்புறுத்த முயலுவாராக.

போ. சிவகுரு S. S. C. மாணவன்
கமலாசனி வித்தியாசாலை மட்டுவில்.

---

புறம் நடப்பதெல்லாம் "கல்வி" யைப் பொறுத்தவிஷயம். என்னவானாலும் டிரைவருக்குக் குற்றமோ தண்டனையோ கிடைக்கத்தான் செய்யும். முற்பிறப்பிலே ஏதாவது கொடிய பாவம் செய்தவன்தான் இப்பிறவியில் டிரைவராகப் பிறக்கிறானென்பது எனது எண்ணம். அவன் இறந்தபின்னாவது அவனது ஆத்மா சாந்தி அடையட்டும

---

**ஈழகேசரி கல்வி அனுபந்தம்**
தனிப்பிரதி விலை சதம்—3
25 பிரதிகள் விலை சதம்—50
தபாற் செலவு வேறு
ஆண்டுச்சந்தா ரூபா 2.
முற்பணமின்றி அனுப்பப்படமாட்டாது

---

பொய்யகல மெய்யான போதநிலை கண்டோர்க்கோர், ஐயமிலை ஐயமிலை ஐயா பராபரமே.

# ஈழகேசரி இளைஞர்சங்கம்

செல்வக் குழந்தைகாள்!

எல்லோருக்கும் நமஸ்காரம். கழிந்த சில கிழமைகளாக உங்களுக்கு எனது அபிப்பிராயங்கள் சிலவற்றை வெளியிடலாமென்றிருந்தேன். ஆனால் தடுப்பரும் தடைகள் இடறுகட்டைபோல் முன்னின்றன. மன்னிக்கவும்.

எனக்கும் ஒருவருடம் எப்படிக் கழிந்ததென்று தெரியவில்லை. உங்கள்மேற்கொண்ட அன்பின் காரணமாக ஒரு கணப்பொழுதேனும் என் செல்வச்சிறுவர்களாகிய உங்களை மறந்ததில்லை. என் கண்களை இறுக மூடிக்கொண்டாலும் உங்கள் தோற்றமும் பிரசன்ன வதனமும் ஒன்றன்பின் ஒன்றாக என்முன் சுற்றிச் சுழல்கின்றன. பலமுறை உங்கள் ஒவ்வொருவரையும் நேரிற் கண்டும் கலந்தும் பேசவேண்டுமென்றும் ஆவல் கொண்டிருந்தேன்; சந்தர்ப்பம் நேரவில்லை. அதிசீக்கிரத்தில் கைகூடுமென்பது என் எண்ணம். நீங்கள் முந்திய சிறுவர்களுமல்ல; நானும் முந்திய தாத்தாவுமல்ல. ஒவ்வொருவரும் ஒவ்வோர் வயதில் முதிர்ந்துள்ளோம். நாளுக்குநாள் அனுபவங்களும் கூடிக்கொண்டே வருகின்றன.

கல்வியனுபந்தம் முக்கியமாக உங்களின் நன்மையைக் கோரியே சில பெரியோர்களின் வேண்டுகோளுக்கிணங்கி வெளியிடப்பட்டது. இவ்வனுபந்தம் முதலாவது மலரின் இதழ்களைக் குவித்து இரண்டாம் மலரில் முகையை நெகிழ்க்கின்றது. இச் சிறுவர்க்குரிய அனுபந்தம் என்றும் எவராலும் நன்கு மதிக்கக்கூடிய நிலையில் வைத்தலே நீங்கள் செய்யும் பேருதவியாகும். அதே கடமையுமெனப்படும்.

கழிந்த ஒரு வருடமாகப் பேரன் பேத்திகளில் சிலர் தம்மால் இயன்ற விஷயங்களை அனுப்பிவைத்ததற்காக நான் என்றும் கடமையுள்ளவனாயிருக்கிறேன். இது விஷயத்தில் யாவரும் முயற்சி செய்து விஷயங்கள் அனுப்பவேண்டும்; பரிசு பெறவேண்டும்; விவேகியென்றும் மற்றவர்களால் நன்கு மதிக்கப்படவேண்டும்; அல்லாமலும், உங்களுக்குத் தெரிந்த நண்பர்களையும் மற்றவர்களையும் இளைஞர்சங்க அங்கத்தவர்களாகச் சேர்க்கவேண்டும். இவைகள் எல்லாவற்றையும் முறையே செய்துவந்தால் நீங்கள் முன்னேற்றம் அடைவதற்கு ஓர் நல்வழியாகும்

நான் கதிர்காம யாத்திரைக்குப் பாட்டியுடன் சென்றபிற்பாடு என் நன்றியைக் கூற இயலாமலிருந்தது. பாட்டி ஆஸ்பத்திரியில் இருந்தகாலத்தில், நீங்கள் ஒருவரேனும் அவரது சுகதுக்கங்களைப்பற்றி விசாரிக்கவுமில்லையாம்; எழுதவுமில்லையாம் என்று உங்களில் பழிசுமத்துகிறாள். அதைக்கொண்டு 'உங்கள் ஒவ்வொருவரிடமிருந்தும் ஏதாவது செய்திகள் கிடைத்தாலேயன்றி உங்களைக் கண்ணெடுத்துப் பார்ப்பதுமில்லை; ஒரு வரி எழுதுவதுமில்லை' என்று பிடிவாதமாய் இருக்கிறாள். நான் என்னால் இயன்றவரையில் உங்களுக்காகப் பரிந்து பேசினேன். ஏனென்றும் கேட்கவில்லை. உங்களால் வயது முதிர்ந்த இவ்வேளையில் குடும்ப சச்சரவுகள் எங்களுக்குள் ஏற்படவுங்கூடும். அப்படிச் செய்யாதீர்கள். நீங்களும், உங்கள் பாட்டியும் பட்டபாடு.

குழந்தைகளே! உங்கள் பாடசாலைப் பரீட்சைகளும் அனேகமாக இம் மார்சங்களிலேயே நடைபெற்றிருக்குமென்று நம்புகிறேன். அப்படியாயின் உங்கள் பெறுபேறுகளை நான் அறிய விரும்புகின்றேன். சித்தியடையாதவர்களும் உங்களில் சிலர் இருக்கக்கூடும். அப்படிச் சித்தியடையவில்லையாயின், அதற்காகத் துக்கப்படவேண்டாம்; எல்லாம் நன்மைக்கென்றே மனதிற் பதியுங்கள். ஆனால் ஒன்று. பாடசாலைப் படிப்பில்மாத்திரம் நில்லாமல், தோட்டவேலைகளிலும், வீட்டுக் கருமங்களிலும் அதிக சிரமம் எடுக்கவேண்டும். படித்தவர்கள் எல்லோரும் உத்தியோகம் பார்க்கலாம் என்னும் எண்ணத்தை அடியோடு மறந்துவிட வேண்டும். உலகம் என்ன முறையில் இருக்கிறதென்று உங்களுக்குத் தெரியுமா? தெரியாது.

நவராத்திரிப் பூசையும் உங்கள் ஒவ்வொருவரது வீட்டிலும், பள்ளிக்கூடங்களிலும் சீரும் சிறப்புமாகப் பல ஆடம்பரங்களுடனும் நடைபெற்றதென்று கேள்வியுற்றேன். சில இடங்களில் நானே நேரிற் சென்று பார்த்தேன். அவை எல்லாம் எனக்கு அளவிலா மகிழ்ச்சியை அளித்தன. என்னை விஜயதசமியன்று சில பேரன் பேத்திகள் தங்கள் சகோதரர்களுக்கு வித்தியாரம்பம் செய்துவைக்கும்படி கேட்டார்கள். என்பாற் கொண்ட அன்பை அச் செய்கைகள் விளக்கிக் காட்டுகின்றன அல்லவா? எல்லாம் நன்மையாகவே நிறைவேறியது. எல்லோரும் தாம் நல்லதென எடுத்துக்கொண்டவைகளில் நன்மையை யடையவேண்டுமென்பதே என் விருப்பம்.

பிள்ளைகளே! அதிகம் எனக்கு எழுத விருப்பம். ஆனால் வயோதிப காலத்தில் ஓரிடத்தில் இருந்து எழுத இயலவில்லை. கடதாசியும் வரவர ஈரமாகிறது. பேனா பிடித்த கையும் சோர்வடைகிறது.

மறுபடியும் எங்கள் இருவரது ஆசியையும் தெரிவிப்பதோடு, நீங்கள் இறங்கிய எத்துறைகளிலும் முன்வரவேண்டுமென்று கலைவாணியைக் கல்வியனுபந்தமாய் வெளிப்பட்டு அறிவு நிறைவு முதலியவற்றைப் பரப்புமாறு உங்கள் சார்பாக வேண்டுகின்றேன்.

"திருவும் கல்வியும் சீரும் தழைக்கவும்
கருணை பூக்கவும் தீமையைக் காய்க்கவும்
பருவமாய்நம துள்ளம் பழுக்கவும்
பெருகு மானத்துப் பிள்ளையைப் பேணுவாம்"

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக.

இங்ஙனம்
உங்கள் அன்பைப் பெருக்கி
அறிவைப் புகட்டுபவர்கள்
"தாத்தா—பாட்டி"

யாழ்ப்பாணம்–மயிலிட்டி தெற்கு "திருமகள்நிலைய"த்திலிருக்கும் நா. பொன்னையா என்பவரால், சுன்னாகம் 'தலையாட்டி'யிலுள்ள திருமகள் அச்சியந்திரசாலையில் 1938-ம் ஞு அக்டோபர் மீ 9உ ஞாயிற்றுக்கிழமை அச்சிடுவிக்கப்பெற்று வெளியிடப்பட்டது